செ.வெ.எண் : 53 /ஆகஸ்ட் நாள் : 28.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் மூலம் இலவச பால் தர பரிசோதனை விழிப்புணர்வு முகாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் இன்று (28.08.2017) மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில், அவர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பாலின் தரம் குறித்து பரிசோதனை செய்து அறிந்து கொள்ள ஏதுவாக, சிறப்பு உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாமினைத் துவக்கி வைத்தார்.

அதன் பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு பாதுகாப்புத் துறையின் மூலம் பொதுமக்கள் உட்கொள்ளும் உணவுப் பொருள்களின் தரம் குறித்து அவ்வப்போது அலுவலர்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றது. இந்நிலையில் தற்போது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் அத்தியாவசியத் தேவையான பாலின் தரம் குறித்து பரிசோதனை செய்திட EMAT (Electronic Milk Adulteration Testing) இயந்திரம் மூலம் மாநிலத்திலேயே இரண்டாவது மாவட்டமாக நமது மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இயந்திரமானது 100 சதவீதம் கணினிமய தானியங்கி (Computerised Automatic) கருவியாகும். இக்கருவியின் மூலம் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் பயன்படுத்தும் பாலின் தரத்தையும், கலப்படம் ஏதும் உள்ளதா? என்பதை மிக துல்லியமாக அறிந்து கொள்ள இயலும். பால் உணவு மாதிரிகள் பகுதி வாரியாக சேகரிக்கப்பட்டு உணவு பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் உடனடியாக தெரிவிக்கப்படுகிறது. அந்த வகையில் இன்றைய தினம் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் இந்த சிறப்பு உணவுப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் இராமநாதபுரம் நகரம் மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்குட்பட்ட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தாங்கள் பயன்படுத்தும் பால் மாதிரிகளை பரிசோதனை செய்து பயன்பெற்றனர்.

மேலும் இச்சிறப்பு முகாம் தொடர்ந்து 29.08.2017 முதல் 06.09.2017 வரை (விடுமுறை நாட்கள் தவிர) மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் இம்முகாம்களில் கலந்து கொண்டு தாங்கள் பயன்படுத்தும் பாலின் தரம் மற்றும் தன்மைகள் குறித்து விழிப்புணர்வு பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் திரு.எம்.ஜெகதீஸ் சந்திரபோஷ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**